கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இன்றைக்குள்ள பஞ்சாயத்து சட்டத்திலே அதற்கான வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அது பற்றி எழுதியனுப்பினால், திருத்தம் செய்ய யோசிக்கலாம்.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

1. FASTING OF WORKERS IN THE ELECTRICAL GOODS MANUFACTURING COMPANIES AT SALEM AND ERODE.

திரு. து. ப. அழகமுத்து: கனம் அவைத் தலைவர் அவர்களே, சேலம், ஈரோடு மின்சாரக் கம்பெனித் தொழிலாளர்கள் பஞ்சப்படி, சம்பள உயர்வு வேண்டும் என்று 17-5-1966 முதல் உண்ணாவிரதம் இருந்தும், ஸ்ட்ரைக் செய்தும் வருகிறார்கள். ஆனால், இந்த நியாயமான கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதம் செய்கிறார்கள். இந்த நிலைமை நீடிப்பதால், தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் சர்க்கார் தலையிட்டு, ஏதாவது வழிவகை செய்ய வேண்டும் என்று, அந்த நிலைபற்றி விவாதிக்க இந்த சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதற்காக நான் ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

* **திரு. மீ. கலியாணசுந்தரம்:** இதிலே இருக்கும் விஷயம் முக்கியமானது. முதலாளிகள் கம்பெனி அட்ஜூடிகேஷன் வேண்டும் என்று கேட்டார்கள். அரசாங்கமும் நீதிபதி தீர்ப்புக்கு விட்டது. முடியும் தருவாயில், நீதிபதி காலவரையறை இல்லாமல் ஒத்திப் போட்டுவிட்டார். பணச் செலவு எவ்வளவு என்று தெரிய வேண்டும் என்று கேட்டு, தீர்ப்பை ஒத்திப் போட்டுவிட்டார். அதனால் பரிகாரம் காணமுடியாத சங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிட்டார். இதற்கு ஒரே பரிகாரம், அந்த நீதிபதியை மாற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், இது முக்கியமான பிரச்னை. கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து கொண்டு வந்திருப்பது ரொம்ப நியாயமானது. கனம் முதல் அமைச்சர் ஏதாவது சொல்வதற்கு இருந்தால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறுகின்ற நிலையில் கூட இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்பது தான் என் அபிப்பிராயம். அதற்கென்று ஒரு இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்றால், அது வேறு விஷயம். ஸ்ட்ரைக், உண்ணாவிரதம் இருப்பது எல்லாம் கூட எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், லேபர் கமிஷனரைக்

கூப்பிட்டு என்ன செய்யமுடியும் என்று பார்க்கலாம். நீதிபதி விஷயம் அவர்களுக்கு (திரு. கலியாணசுந்தரத்திற்கு) தெரியும், அவர்களிடம் சொல்லியிருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : இம்மாதிரி விஷயங்களில் விவரம் அறிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு 'ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின்' கொடுத்திருக்கலாம். அப்போது அதன் மீது இரண்டு, மூன்று உப-கேள்விகளாவது போடலாம். அதை விட்டு அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தால், அது 'ரூல் அவுட்' ஆகிவிடுகிறது.

I rule this motion out of order.

2. FIRE ACCIDENTS IN TINDIVANAM.

திரு. ஆ. தங்கவேலு : கனம் சபாநாயகர் அவர்களே, திண்டிவனம் நகரம் ஒன்றாவது, இரண்டாவது வார்டுகளில், 28-7-1966 முதல் 4-8-1966 வரை திடீர் திடீர் என்று இங்குமங்கும் ஆக பல தடவை தீ விபத்து ஏற்பட்டு பல வீடுகள் தீக்கிரையாகி விட்டன. 4-8-1966-ம் தேதி மட்டும் 4 தடவை தீ விபத்து ஏற்பட்டு, பாமர ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எந்த நேரத்தில் தங்கள் வீடுகள் தீ விபத்துக்குள்ளாகுமோ என்ற பீதியால் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு சாமான்களை வெளியிடங்களில் போட்டு காவல் புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. நகர மக்கள் மிகவும் பீதிக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைப்பற்றி விவாதிக்க இச்சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோரி நான் இத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : குறவியா, ஏவலா ? ஏது என்று சொல்லவில்லையே ? (சிரிப்பு)

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே. Fire accident என்றால், அது ஒரு occurrence தான் அவசரப் பிரேரேபணைக்கான வாசகத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. தீ விபத்து என்றால், அது ஒரு occurrence தான் என்று சொல்லி. அதற்காக இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து. அரசாங்கம் பதில் சொல்லவேண்டும் என்று கோருவதற்கில்லை. திண்டிவனத்தில் மாத்திரமல்ல, மற்ற கிராமங்களிலும் இதுபோன்ற நிலைமை ஏற்படலாம். கூடியவரையில் நகரங்களில் Fire Service Stations வைத்திருக்கிறோம். எங்கெங்கே அமைக்கப்படுகின்றன என்கிற விவரம் அப்போதைக்கப்போது வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இந்த ஆண்டில் திண்டிவனத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் வைக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு பட்ஜெட்டில் அது இடம் பெற்றிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. இதெல்லாம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு